ஈழத்துச் சிறுவர் கதைகள் - 1

# அம்மாவைத் தேடிய குஞ்சு



இலக்கியன் வெளியீட்டகம்

ஈழத்துச் சிறுவர் கதைகள் - 1

# அம்மாவைத் தேடிய குஞ்சு

தொகுப்பு

**செ. யோகராஜா**

ஓவியம்: ஆர். கௌசிகன்

இலக்கியன் வெளியீட்டகம்

# நிலக்கரியும் சிறுவனும்

– செ. கணேசலிங்கன் –

நிலக்கரிச் சுரங்கத்தின் அருகே ஒரு சிறு ஊர். அங்கு ஒரு குடிசையில் ஒரு சிறுவன். அவன் தந்தை நிலக்கரிச் சுரங்கத்தில் வேலை செய்து வந்தான். இப்போது வேலையில்லை. வீட்டில் வயிற்றை நிரப்புவதற்கே வழியில்லை. தாய் இறந்து விட்டாள். ஒரே மகன்.

கடுங்குளிர், போதிய கம்பளி உடைகளே இல்லை. தந்தையும் மகனும் தணிந்துகொண்டிருந்த அடுப்பங் கரையில் குளிர் காய்ந்து கொண்டிருந்தனர். அடுப்பு தீய்ந்து கொண்டிருந்தது. சிறுவனின் கரங்கள் குளிரினால் விறைத்து விட்டன. உடல் நடுங்கிக் கொண்டிருந்தது. பற்கள் அடித்துக் கொண்டன.

''அப்பா, குளிர் தாங்க முடியவில்லை. அடுப்பிலே கொஞ்சம் நிலக்கரி போட்டு விடேன்.''

அடித்துக் கொண்டிருந்த பற்களின் ஓசையிடையே கெஞ்சும் குரலில் தந்தையிடம் சிறுவன் கேட்டான்.

''கரி இல்லையே. எனக்குக் கூட நடுங்குகிறதே. நான் என்ன செய்வது?'' தந்தை சொன்னார்.

''ஏனப்பா கரியில்லை?''

''கரி வாங்கக் காசில்லை''

''ஏனப்பா காசில்லை?''

''என்னை சுரங்க வேலையிலிருந்து நீக்கி விட்டார்கள்.''

''ஏனப்பா வேலையிலிருந்து நீக்கி விட்டார்கள்?''

''நாங்கள் ஏராளமாக நிலக்கரியைக் கிண்டிக் குவித்து விட்டோமாம். அது விற்பனையாக வில்லையாம். அதனால் வேலையிலிருந்து நீக்கி விட்டார்கள்.''



தந்தை பதில் கூறினார்.

''நீங்கள் கிண்டிய நிலக்கரியை ஏனப்பா நீங்களே அள்ளிக் கொண்டு வந்திருக்கலாமே. அடுப்பிலே போடக் கரியில்லாமல் எவ்வளவு கஷ்டப் படுகிறோம்.''

''நான் அள்ளினால், திருடினேன் என்று சுரங்க முதலாளி சொல்ல, பொலிஸ் காரன் பிடித்துக் கொண்டு போய் விடுவான். பிறகு உன்னை யார் பார்க்கிறது?''

''பொலிஸ்காரன் முதலாளியின் காவல்காரனா? அப்பா.''

மகன் கேட்டான்.

''அப்படித்தான் சொல்ல வேணும்''

தந்தை நடுங்கியபடி பதில் கூறினார்.

# தங்கத் தாமரை

– செ. யோகநாதன் –

அப்பா அம்மாவிற்கு கண்ணம்மா ஒரே ஒரு ஆசைக் குழந்தை. கண்ணம்மாவிற்கு ஐந்து வயது. நல்ல கெட்டிக்காரப் பெண். எல்லாரும் கண்ணம்மாவை விரும்பினார்கள். அப்பா, அம்மா, பாட்டி சொல்வதைக் கண்ணம்மா அப்படியே கேட்டு நடப்பாள். அவள் பூக்களில் மிகவும் விருப்ப முள்ளவள். ஆகையால், அவளை எல்லோரும் 'தங்கத் தாமரை' என்று செல்லமாக அழைப்பார்கள்.

அன்று மாலை அம்மாவோடு அருகில் இருந்த கடற்கரைக்குச் செல்ல நினைத்தாள் கண்ணம்மா. அம்மாவும் சம்மதித்தார். கொஞ்ச நேரம் நித்திரை செய்து விட்டுப் போகலாம் என்றார் அம்மா. கண்ணம்மாவும் சரி என்று. படுக்கையில் படுத்தாள். நித்திரை ஆகிவிட்டாள். கொஞ்ச நேரம் போயிற்று.

''கண்ணம்மா.......''

மெல்லிய குரல் ஒன்று கேட்டது. கடல் அலை போன்ற சத்தம். இரகசியமாய்ப் பேசுகின்ற அக்குரலால், கண்ணம்மா அங்கும் இங்கும் பார்த்தாள்.

''யார் அது?''

கண்ணம்மா தயக்கத்தோடு கேட்டாள்.

''நான் தான் கடல் ராஜா....''

''என்ன?''

''ஆம், கண்ணம்மா. உன் வீட்டின் முன்னே உள்ள கடலின் ராஜா நான் தான். வா உன்னை நான் என் முதுகில் சுமந்து செல்கிறேன். கடலின் மீது நீ நடந்தே செல்லலாம்...''



அன்பு மிக்க செல்வமே
ஆரை நீயிங்கு தேடுகிறாய்?
உந்தன் முன்னே நிற்கின்றேன்
உற்று என்னைப் பார்த்திடுவாய்
நீலக்கடல் என் பெயரே
அலைகள் எந்தன் பிள்ளைகளே
உந்தன் காலைத் தொடட்டுமா
ஓடி அருகே வரட்டுமா?

கண்ணம்மாவின் எதிரே அலைகள் துள்ளித்துள்ளி விழுந்தன. வெண் நுரைகள் சிதறின, சில வெண்நுரைகள் அவளது காலைத் தொட்டன. குமிழிகளாய்ப் பறந்தன, பிறகு உடைந்தன, நீர்த்துளியாய் கண்களுக்குத் தெரியாமல் மறைந்தன. அவற்றில் ஒன்றைக் கண்ணம்மா பிடித்தாள். கையினுள் நுரைக்குப் பதிலாக தண்ணீர் இருந்தது. உள்ளங்கை குளிர்ந்தது. கண்ணம்மா கையை உதறினாள், சிரித்தாள்.

இப்போது கடல் அலைகள் உரத்துச் சிரித்தன. மேலும் உயரமாக எழுந்தன. கண்ணம்மாவின் இரண்டு கைகளையும் தொட்டன. பெரிய

அலையொன்று அவளை முதுகில் ஏற்றிக் கொண்டது. வேகமாக கடலின் உள்ளே சென்றது.

கண்ணம்மா பயந்துபோய்விட்டாள். எதையும் பேசமுடியவில்லை. அலைகளின் அன்பான குரல் அவளது பயத்தை மெல்ல மெல்லப் போக்கிற்று.

கடல் அமைதியாக இருந்தது. அழகான செடிகள், வண்ண வண்ணப் பூக்கள் செடிகளில் பூத்திருந்தன. மஞ்சள், சிவப்பு, நீலம், வெள்ளை நிறங்களிலே சின்னப் பூக்கள். வட்டமாய், சதுரமாய், நீளமாய், அகலமாய் அந்தப் பூக்களின் இதழ்கள். அந்தப் பூச்செடிகளின் இடையே சின்னச் சின்ன மீன்கள் திரிந்தன. தங்கம் போலவும் வெள்ளி நிறத்திலும் மின்னின. அவற்றின் கண்கள் நீலமணிகளாய் பளபளத்தன.

பூஞ்செடிகளும், மீன்களும் கண்ணம்மாவை வரவேற்றன. வலம்புரிச் சங்குகள் கடலின் கீழே இருந்து மேலே வந்தன. இதுவரை அவள் கண்டு தெரிந்திராத ஓடுள்ள பிராணிகள் அசைந்து அசைந்து வந்தன. ஊரிகள் மெல்லப் பாடின. கண்ணைப் பறிக்கும் நிறமுள்ள நண்டுகள் வேகமாக அவளைக் கண்டு சுற்றிச் சுற்றி வந்தன.


கண்ணம்மாவுக்கு அளவு கடந்த மகிழ்ச்சி.

அவள் காதோடு மெல்லிய குரல் பேசியது:

''அன்பான செல்வமே, கடலில் வாழுகின்ற மிருகங்களில் எது பெரியதென்று உனக்குத் தெரியுமா?''

''எனக்குத் தெரியாது'' என்றாள் கண்ணம்மா.

''நீலத் திமிங்கிலந்தான் பெரியது. இது நூறு அடி நீளமுடையது. நூற்றி இருபது தொன் நிறையுடையது. ஒரு யானை ஏழு தொன் நிறையுடையது. நீலத் திமிங்கிலம் ஒருவேளை உணவாக மூன்று தொன் உணவைச் சாப்பிடும். நீலத் திமிங்கிலத்திற்கு அருகே நிலத்தில் வாழும் பிராணிகளில் பெரியதாகிய யானையை நிறுத்தினால் எப்படி இருக்கும் தெரியுமா?''



''தெரியாதே!'' என்றாள் கண்ணம்மா.

''யானை அப்போது ஒரு பூனைபோலத் தெரியும்.....''

கண்ணம்மாவுக்கு அதிசயம் தாங்கவில்லை. ''அப்படியா'' என்றாள்.

''கண்ணம்மா, இனிமேல் என்முதுகில் கவனமாக உட்கார்ந்திருக்க வேண்டும்..... பயப்படக்கூடாது'' என்றது கடலின் குரல்.

''ஏன்?'' என்றாள் கண்ணம்மா.

''சமுத்திரம் என்றால் என்ன தெரியுமா?''

கண்ணம்மா யோசித்தாள்.

''மிகப்பெரிய கடலையே சமுத்திரம் என்று சொல்வார்கள்.''

''அப்படியா?'' வியப்போடு கேட்டாள் கண்ணம்மா.

சமுத்திரம் கருநீலமாய் விரிந்திருந்தது. பெரிய மீன்கள் வேகமாகப் போயின. அமைதி எங்கும் நிலவிற்று.

திடீரென்று ஏதோ சத்தம்.

சமுத்திரநீர் சிதறியது. 'டொம்டொம்' என்று சத்தம் கேட்டது. சமுத்தி ரத்தை யாரோ குலுக்கியது போல அதிர்ந்தது.

கண்ணம்மா திடுக்கிட்டுப் போனாள். ''கண்ணம்மா பயப்படாதே. நீலத்திமிங்கிலம் எதிரே வந்து கொண்டிருக்கிறது....''

இப்போது காதைக் கிழிக்கும் சத்தம்.

பெரியமலை ஒன்று வாலைச் சுழற்றிக் கொண்டு வருவது போல நீலத் திமிங்கிலம் மிதந்து வந்தது. வாயை ஓவென்று திறந்தது.

''அம்மா அம்மா......'' சத்தமாகக் கத்தினாள் கண்ணம்மா.

கண்களை விழித்தாள்.

அவள் அப்போது கட்டிலில் படுத்திருப்பதை உணர்ந்தாள், அம்மா அவளின் அருகே வந்தார். நெற்றியில் பொங்கிய வேர்வையைத் துடைத்து விட்டார்.

அம்மா அன்போடு அவளிடம் கேட்டார்:

''கண்ணா, கனவு கண்டாயோ?''

கண்ணம்மாவுக்கு அம்மாவைப் பார்க்க வெட்கமாக இருந்தது. புன்னகை செய்தாள்.

''நான் உனக்குக் கடலில் வாழும் மிருகங்கள், மீன்களைப் பற்றிக் காலையிலே சொன்னேன். அப்போது மாலையில் கடல் பார்க்கப் போகலாம் என்று கேட்டாய். நித்திரையாகி விட்டாய். அதுசரி என்ன கனவு கண்டாய்?''

கண்ணம்மா ஆச்சரியமாக அம்மாவைப் பார்த்தாள். தான் கண்ட கனவைப் பற்றிக் கூறத் தொடங்கினாள். உங்களுக்கு அந்தக் கனவு என்னவென்று தெரியுந்தானே?

# புரிந்துணர்வு

- ஓ.கே. குணநாதன் -

வன்னிப் பிராந்தியத்தின் ஒரு மூலையில் அமைந்திருந்தது அடர்ந்த குமணைக் கானகம்.


பென்னம் பெரிய மரங்கள் முதல் சிறிய மரங்கள் வரை எங்கும் அடர்ந்து வளர்ந்து கிடந்ததனால், அக்காட்டில் கொடிய மிருகங்களான சிங்கம், புலி, கரடி போன்றவைகளும் பெரிய மிருகமான யானையும் வசித்து வந்தன. அதேநேரம் சிறிய மிருகங்களான மான், முயல், பன்றி, மரை போன்றனவும் ஊர்வனவான எறும்பு, கறையான் போன்ற ஜந்துக்களும் வசித்து வந்தன. இவை அனைத்தும் ஒற்றுமையுடன் வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்தன.

காலஞ் செல்லச் செல்ல ஒற்றுமையுடன் வாழ்ந்துவந்த மிருகங்களுக் கிடையே ''நீ பெரியவனா? நான் பெரியவனா?'' என்ற போட்டி மனப்பான்மை வளர ஆரம்பித்தது.

இதனால் மிருகங்களுக்கிடையே ஒற்றுமையின்மை தோன்றி சின்ன மிருகங்களைப் பெரிய மிருகங்கள் கேலி பண்ணவும், வலிமை குன்றிய மிருகங்களை வலிமைமிக்க மிருகங்கள் அடிமையாக நடத்தவும் தொடங்கின.

இவ்வாறான சூழ்நிலையில், ஒரு நாள், கோடை வெயிலில் உணவு தேடி அலைந்த காட்டு யானை ஒன்று களைப்பாறுவதற்காக குடை போல வளர்ந்து நிழல் பரப்பிக்கொண்டு நின்ற ஆலமரம் ஒன்றின் கீழே வந்து நின்றது.

அப்போது அதன் கண்கள் தற்செயலாக அந்த மரத்தின் கீழ் ஊர்ந்து கொண்டிருந்த சில எறும்புகளின் மீது பதிந்தன.



அந்தச் சின்னஞ் சிறிய எறும்புகளைக் கண்ட காட்டு யானைக்குத் தன்னை யறியாமலேயே சிரிப்பு வந்துவிட்டது.

ஏளனச் சிரிப்பொன்றுடன் சின்னஞ் சிறிய எறும்புகளைப் பார்த்து ''எறும்புகளே! எறும்புகளே! எங்கே பயணம்?'' என்று கேட்டது.

அதற்கு எறும்புகள் ''யானை அண்ணா யானை அண்ணா நாங்கள் உணவு மூடைகள் சுமந்து செல்கின்றோம்'' என்றன.

இதைக் கேட்ட காட்டு யானை, ''ஆ..... உங்களுடைய பருமனில் நீங்கள் மூடையா சுமக்கிறீர்கள்'' என்று நகைப்பாகக் கேட்டது.

உருவத்தில் பெரிய காட்டு யானையின் கேலி வார்த்தைக்கு எதிர்த்துக் கதைக்கப் பயந்த எறும்புகள் எதிர் வார்த்தைகள் ஒன்றுமே பேசாமல் மௌன மாகத் தலை குனிந்து நின்றன.

எறும்புகள் தலை குனிந்து நின்றதும் காட்டு யானைக்கு மேலும் மமதை ஏறவே, எறும்புகளைப் பார்த்து ''மூடை சுமக்கும் எறும்புகளே! என்னுடன் உங்களால் போட்டி போட முடியுமா?'' என்று ஏளனத்துடன் கேட்டது.

அவ்வார்த்தைக்கும் எதுவுமே பேசாமல் எறும்புகள் அப்படியே தலை குனிந்து நின்றன.

தான் கதைக்கக் கதைக்க எறும்புகள் தலை குனிந்து கொண்டே நின்ற தனால் காட்டுயானைக்கு மேலும் கோபம் அதிகரித்தது.

''அற்ப எறும்புப் பயல்களே! நான் தொடர்ந்து கதைத்துக் கொண்டே இருக்கின்றேன். நீங்கள் பேசாமல் இருக்கின்றீர்கள். உங்களுக்கு எவ்வளவு மமதை இருக்க வேண்டும். நான் யார் தெரியுமா? காட்டின் பலசாலி. உருவத்தில் பெரியவன். வீரத்தில் வலியவன். அப்படியிருக்க நீங்கள் என்னை ஏளனம் செய்யப் பார்க்கிறீர்கள். அப்படித்தானே! நான் நினைத்தால் உங்களை ஒரு கணத்தில் அழித்து ஒழித்து விடுவேன்'' என்று வீராவேசமாய்க் கத்தியது.

அவ் வார்த்தையைக் கேட்ட எறும்புகள் நடுநடுங்கிப் போயின. சில கணங்கள் தடுமாறிப் பின் மெதுவாகத் தலையை நிமிர்த்தி ''யானை அண்ணா நாங்கள் அப்படியொன்றும் ஏளனம் செய்யவில்லை'' என்றன.

அதற்குக் காட்டு யானை, ''ஆ... என்னை எதிர்த்துக் கதைக்கு மளவிற்கு உங்களுக்குத் தைரியம் வந்து விட்டதா?'' என்று கூறிச் சினந்தது.

''யானை அண்ணா, நீங்கள் நினைக்கும் அளவிற்கு ஒன்றும் நினைக்கவில்லை. நீங்கள் பெரியவர். அதனால் தான் நீங்கள் கதைக்கும் போது எந்தவொரு எதிர் வார்த்தையும் கதைக்காமல் மௌனமாகத்

தலை குனிந்து நின்றோம். அப்படி நாங்கள் செய்தது பிழையென்றால் எங்களைப் பெரிய மனது கொண்டு மன்னித்து விடுங்கள்'' என்றன ஒரு குரலில்.

எறும்புகளின் இந்தப் பதில் காட்டு யானைக்கு மேலும் கோபத்தைக் கூட்டிற்று.

''அற்ப பயல்களே! செய்வதையும் செய்து விட்டு மன்னிப்பா கேட்கிறீர்கள். மன்னிப்பு என்பது எனது வாழ்க்கையிலேயே கிடையாது. இன்னும் உங்களை உயிருடன் விட்டு வைத்தால் எனது குலத்திற்கே அவமானம். நான் இன்று போய் மீண்டும் சில தினங்களில் வந்து உங்கள் எல்லோரையும் கொன்று உங்கள் இனத்தையே அழித்து விடுவேன்'' என்று கூறிக்கொண்டு வேகமாகக் காட்டினுள் மறைந்து சென்றது.

ஆனால், எறும்புகளோ அவ்வார்த்தை பற்றி எதுவுமே அலட்டிக் கொள்ளாமல் வழமை போலவே சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தன.


சில நாட்கள் கழிந்தன. மாரி காலமும் வந்தது.

மாரி மழை 'சோ' என்ற இரைச்சலுடன் பல நாட்களாகக் கொட்டோ கொட்டெனக் கொட்டிக் கொண்டிருந்தது.

அப்பொழுது காட்டு யானைக்கு எறும்புகளுக்கு விதித்த காலக் கேடு நினைவுக்கு வந்தது. கொட்டும் மழையையும் பொருட்படுத்தாது எறும்பு களின் இருப்பிடத்தை நோக்கிச் சென்றது.

கொட்டும் மழையில் நனைந்து சென்றதனாலும் பல நாட்கள் பட்டினி கிடந்ததினாலும் காட்டு யானைக்கு ஒருவித நடுக்கம் பிடிக்கவே, அதே ஆலமரத்தின் கீழே போய் நின்றது.

சுற்றும் முற்றும் எறும்புகளைப் பார்த்தது. அங்கே ஆலமரத்தின் கீழே எறும்புகள் அமைத்திருந்த புற்றுக்குள்ளிலிருந்து கொட்டும் மழையை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த கொழுத்துப் பருத்த எறும்புகளைக் கண்டது.



இதைக் கண்ட காட்டு யானைக்கு எறும்புகளைக் கொல்ல வந்த எண்ணமே மறந்து போனது.

மெதுவாக எறும்புப் புற்றை நோக்கி நடந்தது.

காட்டுயானை தங்களை நோக்கி வருவதைக் கண்ட எறும்புகள் நடுநடுங்கியபடி ''யானை அண்ணா, எங்களைக் கொல்லாதீர்கள்'' என்று கூச்சலிட்டன.

அதற்குக் காட்டுயானை ''எறும்புத் தம்பிகளே நான் உங்களைக் கொல்ல வரவில்லை. நாங்கள் எல்லாம் மழையில் நனைந்து பட்டினியால் வாடி மெலிந்து போயிருக்க நீங்கள் மட்டும் கொழுத்துப் பருத்து நனையாமல் இருக்கிறீர்களே அதன் மர்மம் என்ன?'' என்று கேட்டது.

அவ்வார்த்தைகளைக் கேட்ட எறும்புகளுக்கு மகிழ்ச்சி பிறந்தது. ''யானை அண்ணா, நாங்கள் எல்லோரும் ஒரே இனம் என்ற வகையில் கூட்டாகச் சுறுசுறுப்பாகச் செயற்படுகின்றோம். இதன் பயனாக

எங்களுடைய மூலப்பொருட்களைக் கொண்டே வீடு கட்டியுள்ளோம். அதற்குள் உணவையும் சேமித்து வைத்துள்ளோம். அதனால் மழை காலத்தில் நனையாமல் இருந்து கொண்டு சேமித்த உணவைச் சாப்பிடுகிறோம். அவ்வளவு தான். இதில் எந்தவித மர்மமும் கிடையாது'' என்றன.

''அப்படியா'' என்று ஆச்சரியமாகக் கேட்ட யானை ''நன்றி!'' என்று சொல்லிவிட்டு தனது காட்டுக்குத் திரும்பியது.

மழைக்காலம் முடிந்தது.

உடனே காட்டுயானை காட்டிலுள்ள எல்லா மிருகங்களையும் அழைத்து ஒரு கூட்டம் கூட்டியது. அதில் எறும்புகளின் ஒற்றுமை பற்றி எடுத்துக் கூறியது.

அதை எல்லா மிருகங்களும் ஏற்றுக் கொண்டன. அதன் பின்பு அந்தக் காட்டில் வறுமையில்லை. பட்டினியில்லை. வீடில்லாப் பிரச்சினையில்லை. எல்லா மிருகங்களும் சந்தோஷத்துடன் வாழ்ந்து வந்தன.


# எலிக்குஞ்சுச் செட்டியார்

– பஞ்சாச்சர சர்மா –

நான் இப்போது பெரிய பணக்காரன். இந்தப் பட்டணத்திலுள்ள எல்லோருக்கும் என்னைத் தெரியும். ஆனால், 'சிவநேசம் செட்டியார்' என்ற என்னுடைய பெயர் மாத்திரம் ஒருவருக்கும் தெரியாது. என்னை எல்லோரும் 'எலிக்குஞ்சுச் செட்டியார்' என்றுதான் சொல்வார்கள். ஏனென்றால் நான் இவ்வளவு பணக்காரன் ஆவதற்கு ஓர் எலிதான் காரணம். ஓர் எலியை, அதுவும் ஓர் செத்த எலியை மூலதனமாக வைத்து வியாபாரம் செய்து நான் பணம் தேடினேன் என்று சொன்னால் நீங்கள் நம்பமாட்டீர்கள்தான். ஆனால், நான் சொல்வது முற்றிலும் உண்மை. என் சரித்திரத்தைக் கேட்டுவிட்டுப் பிறகு சொல்லுங்கள். நான் சொல்வது பொய்யா மெய்யா என்று.......

நான் எனது தாயின் வயிற்றிலிருக்கும் போதே என் தகப்பனார் இறந்து விட்டார். என் தாய் மிகுந்த பாடுபட்டு என்னை வளர்த்துப் பின்பு ஒரு சிறிய பள்ளிக்கூட உபாத்தியாரிடம் சம்பளமில்லாமல் நான் கல்வி கற்கவும் ஏற்பாடு செய்தார்.

ஒரு நாள் என் அன்னை என்னை அழைத்து பின்வருமாறு சொன்னார்: ''மகனே நாங்கள் ஏழைகள், மிகுந்த கஷ்டம் அனுபவிக்கின்றோம். எப்போதும் இப்படியே இருக்க முடியாது, நீ இப்பொழுது பெரியவனாகி விட்டாய். இனி எங்கள் குலத்தொழிலான வியாபாரத்தைச் செய்து பொருள் தேட வேண்டும். மூலதனம் இல்லாமல் எப்படி வியாபாரம் செய்வதென்று நீ ஆலோசிக்க வேண்டாம். அடுத்த தெருவிலுள்ள பெரிய வியாபாரியான கதிரேசன் செட்டி யார், வறியவர்களான தன் குலத்தவர்கள் வியாபாரம் செய்ய விரும்பினால், அவர்களுக்கு வேண்டிய மூலதனம் கொடுத்து உதவி செய்கின்றார். நீயும் அவரிடம் போய் வேண்டிய உதவியைப் பெற்று வியாபாரம் செய்'' நானும் அன்னை சொற்படி அங்கே போனேன்.



நான் போனபோது யாரோ ஒரு வாலிபன் செட்டியாரின் முன்னிலையில் தலைகுனிந்து மௌனமாக நின்றான். செட்டியார் அவனைக் குறை கூறிக் கொண்டிருந்தார். ''நான் இருமுறை உனக்குப் பண உதவி செய்தும் நீ அதைக் கொண்டு பொருளீட்டத் தெரியாமல் எல்லாவற்றையும் இழந்துவிட்டு இங்கு வந்து நிற்கின்றாயே. அதோபார், அந்த மூலையில் ஓர் எலி செத்துக் கிடக்கின்றதே அந்த எலியை மூலதனமாகக் கொண்டே பெரும்பொருள் தேடி விடுவான் திறமையுள்ள ஒரு வணிகன். ஆனால் நீயோ நான் தந்த பெருந்தொகை மூலதனத்தையும் அழித்துவிட்டாயே!''

அவர் அவ்வாறு சொன்னவுடன் அந்த எலியை எனக்கே மூலதனமாகத் தரவேண்டுமென்று கேட்டேன். அவர் முதலில் ஆச்சரிய மடைந்தாராயினும், எலியை எடுத்துக் கொள்வதற்குச் சம்மதித்தார். உடனே நான் அதை எடுத்துப் பத்திரப்படுத்திக் கொண்டு வீட்டுக்குப்

புறப்பட்டேன். எல்லோரும் என்னைப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தார்கள்.

வீட்டுக்கு வரும் வழியில் தானியக் கடையொன்றில் வளர்க்கப்படும் பூனையின் உணவுக்காக அந்த எலியைக் கொடுத்து விட்டு அதற்கு விலையாகக் கொஞ்சம் கடலை வாங்கினேன். அதை அவித்தெடுத்துக் கொண்டு நகரத்தின் வெளியே ஒரு மரநிழலிற் போயிருந்தேன். அப்போது விறகு வெட்டிகளிருவர் வெகு தூரத்திலிருந்து விறகுச் சுமையுடன் அங்கு வந்தார்கள். அவர்களுக்கு அந்தக் கடலையைக் கொடுத்துத் தாகத்திற்கு தண்ணீரும் கொடுத்தேன். அந்த உணவிற்குப் பதிலாக அவர்கள் இவ்விரண்டு விறகுத் துண்டுகள் போட்டுவிட்டுப் போனார்கள். அவற்றைக் கொண்டுபோய் விறகுக் கடையில் கொடுத்துச் சில காசுகள் பெற்றேன். அந்தக் காசுக்கு மறுபடியும் கடலை வாங்கி அவித்து விறகு வெட்டிகளுக்கு விற்றேன். இவ்வாறு செய்த சில நாட்களிலேயே அந்த விறகு வெட்டிகளிட மிருந்த விறகு முழுவதையும் நானே வாங்கிவிட்டேன்.

திடீரென வானம் இருண்டது. இடி முழக்கத்துடன் இரண்டு நாட்கள் சோனாமாரியாக மழை பெய்தது. இதனால் எதிர்பாராமல் பட்டணத்தில் விறகுப் பஞ்சம் ஏற்பட்டுவிடவே நான் நியாயமான விலைக்கு என்னிட மிருந்த விறகை விற்று ஏராளமான பொருளைத் தேடினேன். உடனே செட்டித் தெருவில் பெரிய கடையொன்று வாங்கி வியாபாரம் தொடங்கினேன்.

அப்போது நான் இந்த நிலைமையை அடைவதற்குக் காரண மாயிருந்த கதிரேசன் செட்டியாரையும், செத்த எலியையும் மறந்து விடாமல் தங்கத்தால் ஓர் எலி செய்து செட்டியாரிடம் கொண்டு போய்ச் சமர்ப்பித்து என் வரலாற்றையும் சொன்னேன். இதைக் கேட்டு மகிழ்ச்சியடைந்த அவர் தனது மகளை எனக்கு மணம் செய்து தந்தார். அதோ தெரிகிறதே அதுதான் நாங்கள் வாழும் மாடமாளிகை.

இப்போது சொல்வீர்களா, நான் சொன்னது பொய்யென்று?

# அம்மாவைத் தேடிய குஞ்சு

– வ. இராசையா –

மூன்று குஞ்சுகள் அந்தக் கூட்டில் இருந்தன. அவற்றுக்குத் தங்கள் அம்மாவைப் போலத் தாங்களும் கத்த வேண்டும் என்ற ஆசை. ''க்கா, க்கா, க்கா'' ஒரு குஞ்சு கத்தியது. அதன் முதல் கத்தல் அது. கத்தல் நன்றாயிருந்தது. அதற்கு மகிழ்ச்சி! அது மற்றைய குஞ்சுகளைப் பெருமையுடன் பார்த்தது.

''க்கா, க்கா, க்கா'' இரண்டாவது குஞ்சு கத்தியது. அதற்கும் முதல் கத்தல் அது. கத்தல் நன்றாயிருந்தது. அதற்கும் மகிழ்ச்சி! அது மற்றைய குஞ்சுகளைப் பெருமையுடன் பார்த்தது.

''கூ.... கூ..... கூ.....'' மூன்றாவது குஞ்சு கத்தியது. அதற்கும் முதல் கத்தல் அது. கத்தல் நன்றாயிருந்தது. அதுவும் மற்றைய குஞ்சுகளைப் பெருமையுடன் பார்த்துக் கொண்டது.

ஆனால், முதலாம், இரண்டாம் குஞ்சுகள் மூன்றாம் குஞ்சைப் புதுமையாகப் பார்த்தன! ''நீ புது மாதிரியாகக் கத்துகிறாய்! எங்கே, இன்னொரு முறை கத்திப் பார்ப்போம்'' என்றன.

''க்கா, க்கா, க்கா'' முதல் குஞ்சு கத்தியது.

''க்கா, க்கா, க்கா'' இரண்டாம் குஞ்சு கத்தியது.

''கூ.... கூ..... கூ.....'' மூன்றாவது குஞ்சு கத்தியது.

உணவு தேடப் போயிருந்த அம்மா அப்பொழுது கூட்டுக்கு வந்தது.

''அம்மா, நாங்கள் இப்பொழுது முதன் முதலாகக் கத்திப் பார்த்தோம். எங்களில் இரண்டு பேர் உன்னைப் போலக் கத்தினோம். இவனுக்கு அது போலக் கத்த முடியவில்லை, அம்மா'', இப்படி முதல் இரண்டு குஞ்சுகளும் தங்கள் அம்மாவுக்குச் சொல்லின.

''அப்படியா! எங்கே, மீண்டும் ஒருமுறை கத்துங்கள் பார்ப்போம்'' என்று கேட்டது, அம்மா.



''க்கா, க்கா, க்கா''

''க்கா, க்கா, க்கா''

''கூ.... கூ..... கூ.....''

''என்ன! நீ மாத்திரம் வேறு விதமாகக் கத்துகிறாய்? இன்னும் ஒருமுறை நீ கத்து''

''கூ.... கூ.... கூ.....''

''குழந்தாய்! நீ இப்படிக் கத்தக்கூடாது. நாங்கள் காகங்கள். க்கா, க்கா, க்கா என்று தான் கத்த வேண்டும். கத்திப்பார் மகனே.''

அந்தக் குஞ்சு கத்தியது. ''மற்றைய இரண்டு குஞ்சுகளும் என்னைப் போலக் கத்துகின்றன. ஆனால், நீ அப்படிக் கத்தவில்லை! நீ வேறு பறவையின் பிள்ளையோ! எங்கே, இன்னும் ஒருமுறை கத்து, கேட்போம்'' என்றது, அம்மாக் காகம்.

''எனக்கு அப்படிக் கத்த முடியவில்லை அம்மா. கூ.... கூ..... என்று தான் எனக்குச் சத்தம் வருகிறது!''

''ஓ! .... அப்படியானால் நீ காகம் அல்ல. என் பிள்ளை அல்ல. இந்தக் கூட்டுக்குள் நீ எப்படி வந்தாய்?''

''எனக்குத் தெரியாது அம்மா! ''

''உனக்கும் தெரியவில்லை. எனக்கும் தெரியவில்லை. ஆனால், ஒன்று மாத்திரம் தெரிகிறது! நீ காகக் குஞ்சு அல்ல.''

''எனக்கு இது ஒன்றும் தெரியாது அம்மா!''

''இனி என்னை அம்மா என்று சொல்லாதே! நீ எனது குஞ்சு அல்ல. இப்பொழுதே இந்தக் கூட்டை விட்டுப் போய்விடு!'' என்று கோபமாகக் கூறியது காகம்.

''அம்மா, இவன் எங்கள் தம்பி. இவனைத் துரத்த வேண்டாம்!'' என்று மற்றைய குஞ்சுகள் இரண்டும் கெஞ்சின.

''ஐயோ! எனக்கு வேறு அம்மா இல்லையே! நான் எங்கே போவேன்!'' என்று அழுதது இந்தக் குஞ்சு.

''அது எனக்குத் தெரியாது. நீ போய் உன் அம்மாவைத் தேடிக் கண்டுபிடி. போ!'' என்று அந்தக் காகம் இந்தக் குஞ்சைக் கொத்தித் துரத்தியது!

அந்தக் குஞ்சு அழுது கொண்டு கூட்டை விட்டு வெளியே பறந்து போய் மரக்கிளை ஒன்றில் உட்கார்ந்தது. அதன் அழுகை ஓயவில்லை. ''எனக்கு அம்மா வேண்டும், எனக்கு என் அம்மா வேண்டும்'' என்று அழுது கொண்டிருந்தது. அப்பொழுது அந்த மரத்தின் பொந்திலிருந்து ஓர் ஆந்தை தலையை நீட்டியது. ''இங்கேயிருந்து அழுகிறது யார்?'' என்று கேட்டது.

''அழுதது நான். ஒரு பறவைக் குஞ்சு.''

''எனக்குப் பகலில் கண் தெரியாது. அதனால் உன்னைப் பார்க்க முடிய வில்லை..... நீ ஏன் அழுகிறாய்?''

''எனக்கு என் அம்மா வேண்டும். என்னுடைய அம்மாவைத் தேடுகிறேன். நீங்கள் என்னுடைய அம்மாவா?''

''ஐயோ, பாவம்! உன் அம்மாவை உனக்குத் தெரியாதா?''

''அம்மாவை நான் பார்த்தது இல்லை. ஆனால், அவரது குரல் எப்படி யிருக்கும் என்று எனக்குத் தெரியும்.''

''இப்படியிருக்குமா? ..... இதோ, கத்துகிறேன். கேட்டுப்பார்'' என்று கூறி ''கும்ம், கும்ம், கும்ம்'' என்று ஆந்தை அலறியது. அதைக் கேட்ட குஞ்சு ''இல்லை; இப்படி இல்லை'' என்று சொல்லி விட்டு அங்கிருந்து பறந்தது.

குஞ்சு போய் வேறு ஒரு மரத்தில் அமர்ந்தது. அங்கே அது ஒரு புறாவைக் கண்டு அதனிடம் போயிற்று.

''எனக்கு என் அம்மா வேண்டும். நான் என்னுடைய அம்மாவைத் தேடுகிறேன். நீங்கள் என்னுடைய அம்மாவா?'' என்று கேட்டது.

''ஐயோ, பாவம்! உன் அம்மாவை உனக்குத் தெரியாதா?''

''அம்மாவை நான் பார்த்தது இல்லை. ஆனால், அவரது குரல் எப்படி யிருக்கும் என்று எனக்குத் தெரியும்.''

''இப்படியிருக்குமா? இதோ கத்துகிறேன்; கேட்டுப்பார். க்றுக், க்றுக், க்றுக்'' என்று புறா குறுகுறுத்தது.

''இல்லை இப்படி இல்லை'' என்று சொல்லி விட்டு குஞ்சு அங்கிருந்து பறந்தது.

அது இன்னொரு மரத்தில் போய் இருந்தது. அது ஒரு பெரிய ஆலமரம். அதன் அடர்த்தியான இலைகளின் நடுவே இருள். குஞ்சு அம்மாவை நினைந்து அழுதது. அப்பொழுது அந்த இருளில் இருந்து யாரோ பேசுவது கேட்டது.

''நீ ஏன் அழுகிறாய்?''

''எனக்கு என் அம்மா வேண்டும். நான் என் அம்மாவைத் தேடுகிறேன். நீங்கள் எனது அம்மாவா?''

''ஐயோ பாவம்! உன் அம்மாவை உனக்குத் தெரியாதா?''

''என் அம்மாவை நான் பார்த்தது இல்லை. ஆனால் அவரது குரல் எப்படி யானது என்று எனக்குத் தெரியும்.''

''ஓ! இப்படியிருக்குமா? மியாவ், மியாவ், மியாவ்'' என்று கத்திக் கொண்டு ஒரு காட்டுப் பூனை அந்த இருளில் இருந்து வெளிவந்தது. அதனுடைய உருண்டைக் கண்கள்; அவற்றிலிருந்து வரும் கூரிய ஒளி; இவற்றைப் பார்த்து குஞ்சு பயந்து நடுங்கியது.

''ம்ம்.... பயப்படாதே! நான் உன் அம்மா இல்லை என்றால் நீ என்னுடன் வந்து இருந்துகொள். நான் உன் அம்மாவை இந்த மரத்தில் தேடி அழைத்து வருகிறேன்..... வா, என்னிடம் வா....'' இவ்வாறு சொல்லிக் கொண்டு அந்தக் கறுப்புப் பூனை இந்தக் குஞ்சைப் பிடிப்பதற்காக பதுங்கிப் பதுங்கி வந்தது. அது பாய்ந்து பிடிக்க முன் குஞ்சு விர்ர் என்று அங்கிருந்து பறந்து விட்டது.

குஞ்சு சிறிது தூரம் பறந்து போய் வேறு ஒரு மரத்தின் கிளையில் உட்கார்ந்தது, அங்கே ஒரு கிளியைக் கண்டு அதனிடம் போனது. ''எனக்கு என் அம்மா வேண்டும்; நான் என் அம்மாவைத் தேடுகிறேன். நீங்கள் என்னுடைய அம்மாவா?'' என்று கேட்டது.

''ஐயோ, பாவம்! உன் அம்மாவை உனக்குத் தெரியாதா?'' என்று கேட்டது கிளி.

''நான் என் அம்மாவைக் கண்டதில்லை. ஆனால், அவரது குரல் எப்படியானது என்று எனக்குத் தெரியும்.''

''அந்தக் குரல் இது போல இருக்குமா?'' என்று கேட்டு ''கீச், கீச், கீச்'' என்று கிளி கத்தியது. இல்லை; ''இப்படி இல்லை'' என்று சொல்லிவிட்டு குஞ்சு அங்கிருந்து புறப்பட்டது. உடனே ''கொஞ்சம் நின்று கொள்'' என்று கிளி தடுத்தது. ''உன் அம்மாவின் குரல் உனக்குத்



தெரியும் என்கிறாய். அது எப்படியிருக்கும்? கத்திக் காட்டு'' என்று கேட்டது.

உடனே அந்தக் குஞ்சு, ''கூ... கூ.... கூ....'' என்று குரல் எடுத்துக் கூவிக் காட்டியது.

''ஓ! இந்தக் குரலா! இந்தச் சோலையிலே இந்தக் குரலை நான் அடிக்கடி கேட்கிறேன். இனிமையான குரல்! இது குயில் அக்காவுடைய கூவல் அல்லவோ! பிள்ளையின் குரல் அம்மாவின் குரல் போல இருக்கும். உன் குரல் குயிலின் குரல் போல இருக்கிறது. நீ குயிலின் பிள்ளை தான்'' என்று கிளி சொன்னது.

''அப்படியா! நான் குயிலின் குஞ்சா! என் அம்மா குயிலா?.... குயில் அம்மா எங்கே இருக்கிறார்? எனக்குக் காட்டுங்கோ, கிளி அக்கா!'' என்று குஞ்சு ஆசையோடு கேட்டது. ''சிறிது நேரம் இங்கேயே இருந்துகொள். உன் அம்மா மரக்கிளையில் இருந்து கூவுவாள். அப்போது நீ அவளைக் கூப்பிடு'' என்று சொல்லிவிட்டு கிளி அங்கிருந்து பறந்து போயிற்று.

குஞ்சு அங்கேயிருந்து அந்தச் சோலையில் உண்டாகின்ற பறவை ஒலிகளை எல்லாம் கவனமாகக் கேட்டது. சிட்டுகள் கத்தின. குருவிகள் கீச்சிட்டன. கழுகுகள் அலறின. வானம்பாடிகள் பாடின. இவற்றின் இடையே ஒரு கூவல் ஒலியும் வந்தது!

''கூ.... கூ..... கூ.....''

இது கூவியதும் அங்கிருந்து மீண்டும் கூவல் வந்தது. இரண்டும் ஒரே மாதிரியான கூவல்கள்.

''கூ.... கூ..... கூ.....'' இது வந்த கூவல்.

''கூ.... கூ..... கூ.....'' இது குஞ்சினது கூவல்.

''கூ.... கூ..... கூ....'' இது வந்த கூவல்.

''கூ.... கூ..... கூ.....'' இது குஞ்சினது கூவல்.

அந்தக் கூவல் உண்டான இடத்தை நோக்கி, அந்தப் பறவை வந்தது!

அங்கே......

''அம்மா'' என்று சொல்லிக் கொண்டு குஞ்சு அந்தக் குயிலிடம் ஓடியது. அம்மாக் குயில் தனது குஞ்சை சிறகினால் அணைத்து முத்தம் இட்டது!

''குக்கூ! குக்கூ! குக்கூ! எனக்கு அம்மா கிடைத்து விட்டார்! எனக்கு அம்மா கிடைத்து விட்டார்!! '' என்று குஞ்சுக் குயில் கூவியது.

''குக்கூ! குக்கூ! குக்கூ! என் பிள்ளை என்னிடம் வந்துவிட்டது! என் பிள்ளை என்னிடம் வந்துவிட்டது!!'' என்று அம்மாக் குயில் கூவியது.

அந்த மாஞ்சோலைக்குள் இருந்து அந்த அம்மாவும் குஞ்சும் ஆனந்தமாக இப்பொழுதும் கூவுகின்றன.

## ஈழத்துச் சிறுவர் கதைகள் வரிசை

நீதிக்கதைகள், துணிகரச் சம்பவங்கள் கொண்ட கதைகள், மர்மக் கதைகள், யதார்த்தக் கதைகள், அறிவியற் கதைகள், வாய்மொழிக் கதைகள் என்றவாறு சிறுவர் கதைகள் பல்வகைப்பட்டவை. எவ்வகையினவாகவிருப்பினும் அவை சிறுவர் உளவியலுக்கு அமைவாக எழுதப்படுவது அவசியமானது. ஈழத்துத் தமிழ்ச் சூழலில் இத்துறை வளர்ச்சியடையாதிருப்பினும் அவைபற்றி அறிந்திருப்பது விரும்பத்தக்கது. இவ் விதத்தில் அவற்றைப் பரவலாக அறிமுகப்படுத்தும் பொருட்டு ஈழத்துச் சிறுவர் கதைகள் சிலவற்றைத் தொடர்ந்து தொகுத்து வெளியிட எண்ணியுள்ளோம். இவற்றின் நிறைகளையும் குறைகளையும் இனங்கண்டு இவற்றை வாசிப்பீர்களென்று எதிர்பார்க் கின்றோம். சிறுவர் இலக்கியங்களுக்கான முதல் விமர்சகர் சிறுவரேயாவர்.

பேராசிரியர் செ. யோகராசா
(தொகுப்பாசிரியர்)

இத் தொகுப்பிலுள்ள கதைகளின் ஆசிரியர்கள்:

செ. கணேசலிங்கன் *(1928)*: யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர். மாக்சிய நோக்குடைய முக்கியமான புனைகதை ஆசிரியர்; கட்டுரையாளர்; இதழாசிரியர்; நூல் வெளியீட்டாளர்.

செ. யோகநாதன்: யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர். மாக்சிய நோக்குடைய முக்கியமான புனைகதை ஆசிரியர். சிறுவர் இலக்கிய வளர்ச்சிக்கு இவராற்றிய பங்களிப்பு கணிசமானது.

ஓ.கே. குணநாதன்: மட்டக்களப்பைச் சேர்ந்தவர். புனைகதை எழுத்தாளர். சிறுவர் கதைத் துறையில் அதிக நூல்கள் எழுதியிருப்பவர்.

பஞ்சாட்சர சர்மா: யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர். ஈழத்தின் மறுமலர்ச்சிக் காலகட்ட எழுத்தாளர். ஈழத்து நவீன இலக்கிய வளர்ச்சிக்குச் சிறந்த தடமமைத்தவர். சிறுவர் கதை முன்னோடிகளுள் ஒருவர்.

வ. இராசையா (1919-2007): 'வானொலி மாமா' என அன்புடன் அழைக்கப்பட்ட இவர் 1960, 1970களில் இலங்கை வானொலியில் இளைஞர் மன்றம், சிறுவர் மலர் முதலான நிகழ்ச்சிகள் பலவற்றை நடத்தி பேச்சாற்றலும், எழுத்தாற்றலும், இலக்கிய ஆர்வமும் கொண்ட இளைஞர் தலைமுறையினரை உருவாக்கியவர்.



இலக்கியன் வெளியீட்டகம்

**Ilakkiyan Publishing House**
(A Subsidiary of Kumaran Book House)

No. 39, 36th Lane, Colombo 06, Sri Lanka
(P.O. Box 2279, Colombo)
Tel.: (+94) 112 364 550, 113 097 608 Fax: (+94) 112 364 550
E-mail: kumbhlk@gmail.com

No. 3, Meigai Vinayagar Street, Chennai 600 026, India
Tel.: (+91) 44 2362 2680
www.kumaranbookhouse.com

ISBN 978-955-1997-99-1
9 789551 997991
விலை: 225.00

#i100